175443

# திலகவதியார்

158

தமிழகத்துத் தாய்மார் வரலாறு. க.

# திலகவதியார்.

திருச்சிராப்பள்ளி, பிஷப் ஹீபர் ஹைஸ்கூல்,
தமிழ்ப் பண்டிதர்,
மு. நடேச முதலியார்
எழுதியது.

7 -JUL 1923

திருச்சிராப்பள்ளி
ஜைகூல அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு.
1923.

[ 0—6—0.

922.945
3867



திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயத்தின் தலைவரும், கல்விக்கடலின் நிலை கண்டுணர்ந்த பெரியாருமாகிய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் இன்னருளை நினைந்து இந்நூலை அவர்கள் திருவடிகட்கு உரிமை யாக்குகின்றேன்.

மு. ந.

175443



திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் :
ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான
சிவாசார்ய சுவாமிகள்
அருளியது.

---

தமிழகத்துத் தாய்மார் எனும் நூல்வரிசையில் முதன்மை பெற்றிலகும் "திலகவதியார்" படிப்பார் உளத்தில் பதியு நிலையில் எழுதப்பெற்றிருக்கின்றது. செந்தமிழை ஒழுங்குபெறக் கற்கப்புகுவார்க்கு இது மிகவும் உபகாரமாய் இருக்கும். செந்தமிழகத்துத் தாய்மார் சரிதம் வெளிவருவது தமிழை வளர்க்கும் கருவியாவதே யன்றி இப்போது வாழும் தாய்மார் கற்று ஒழுக்கத்திற் சிறப்பதற்குக் கருவியுமாகும். செந்தமிழகத்தின் பழய நிலையும் புலனும். இது போன்று பல நூல் வெளிவரவேண்டுவது இன்றியமையாதது. செந்தமிழகத்தார் அபிமானித்தல் பல நூல் வெளிவருவதற்குக் காரணமாகும் என்பது உலகறிந்தது.

துந்துபிக் கார்த்திகை ௩.

# INTRODUCTION.

This book is the first of a series, the object of which is to introduce youths of the Tamil Land to the most beautiful gems of Tamil literature. That literature has been growing for much longer than two milleniums; during which period, many forms of poetry have been invented and numerous subjects have been taken up for poetic treatment. Some of these poems are difficult, others comparatively easy, but all are of surpassing interest. For the purpose of interesting Tamil youths in these Mr. M. Natesa Mudaliar has started the series of books of which this is the first. It narrates the entrancing story of திலகவதியார், who played a prominent part in the great upheaval of devotion to Siva which arose in Southern India in the seventh century, which covered the land with the magnificent temples which are the most characteristic feature of the

South Indian landscape today and whose momentum has not shown the least sign of having spent itself.

This book is at the same time an attempt to fill a great gap in modern Tamil literature—the want of short easy books in Prose in the literary dialect, which may serve as models of composition to young men. For want of these, Tamil youths neglect to cultivate the acquisition of a facile Tamil style. There is much talk now-adays of encouraging the Vernaculars; but the talk is followed seldom by action. It is hoped that this little book will go some way to help on the consummation of this very devout wish of which we hear so much on platforms.

**P. T. SRINIVASA AIYENGAR**, M.A., L.T.,
*Professor of Education*,
St. Joseph's College, Trichinopoly.

## குறிப்பு.

தமிழகத்துத் தோன்றித் திகழ்ந்த ஒப்புயர்வற்ற தாய்மார் பலராவர். அவர்களின் வரலாறுகளைக் கற்போர் விழுமிய பயனுறுவரென்பதற்கு எத்துணை ஐயப்பாடுமில்லை. அவ்வரலாறுகளெல்லாம் பெரிதும் செய்யுள் நடையிலேயே அமைந்துள. இக்காலத்தில் பிறமொழிகளோடு தமிழ் பயிலும் மாணவர், அவைகளைக் கற்பது பெரிதும் இல்லையென்பதும், ஓரோவொருகால் கற்பான் தொடங்கினும் மிக்கதோர் இடருறுகின்றனரென்பதும் யாவருக்கும் புலனாகியவையே.

இவ்விடரை ஒருவாறு களையவும் நம்மிளைஞர்களுக்கு நம் நாட்டுத் தாய்மார்களின் வரலாறுகளை எளிதில் உணர்த்தவும் எண்ணி இந்நூலை அன்னார்க்கு ஏற்றவாறு சிறு சிறு துண்டுத் தொடர்மொழிகளால் எளிய நடையில் அமைத்திருக்கின்றேன்.

குற்றங்குறைகளிருப்பின் அறிஞர்கள் பொறுத்துக் கொள்வார்களாக.

பூ. ந.

நீலமேனி வாலிழை பாகத்
தொருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே.

ஐங்குறுநூறு.

தாமரை புரையும் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அம்சுடர் நெடுவேல்
சேவல் அம் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.

குறுந்தொகை.

இடையறாப் பேரன்பு மழைவாரு
மிணைவிழியு முழவாரத்திண்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான்
றிருவடிக்கே பதித்த நெஞ்சு
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடற்
றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

காஞ்சிப்புராணம்.



# திலகவதியார்.

தமிழ்மொழி வழங்கும் நிலப்பரப்பெல்லாந் தமிழகமேயாகும். இச்சீரிய தமிழகத்தும் ஏனைநாட்டினும், தாயை முதற்கண் போற்றுதலை ஒவ்வொருசமயத்தினரும் ஒவ்வொரு வகுப்பினரும் ஒப்புக்கொள்வர். தமிழர்களோ இவ்வொழுக்கத்தினைப் பெரிதும் பாராட்டுவர். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றும் 'தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை' என்றும் 'மாதாவை யொருநாளு மறக்கவேண்டாம்' என்றுங் கூறுவா நீதிநூலோர். 'ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாய்' என்றும், 'தாயுமாயெனக்கேதலைக்கண்ணுமாய்' என்றும் 'அம்மையே அப்பா ஒப்பிலாமணியே' என்றுஞ் சமயநூலோர்கூறுவர். இவ்வாறுபாராட்டப்பெற்ற தாயர் இருதிறத்தவராவர். மக்களின் உடலையே பெரிதும் போற்றுந்தாயர் ஒரு சாரார். மக்கள் உயிரின் அறிவை வளர்க்குந்தாயர் ஒருசாரார். உடலை வளர்க்குந்தாய் தம்குழவிகளின் உடலின்மேலேயே நாட்டங்கொண்டிருப்பள். இத்தாயரிற் சிலர் தம்மக்களின் குணத்தையும் எண்ணார், நலத்தையும் எண்ணார். இக்காலத்தில் இவர்களின் தொகை எண்ணிறந்தது.

அறிவை வளர்க்கும் அன்னைமாரோ ஒரு சிலரே யாவர். இவர்கள் உடலை வளர்ப்பதுதான் உறுதிப்பொருளென்று எண்ணார்கள். உடலைக் காப்பதற்கு உணவு ஊட்டுவார்களே யொழிய, உணவை யுட்கொள்ளுவதற்கு உடலை வளர்க்கமாட்டார்கள். மக்களின் அறிவு வளர்ச்சியையே போற்றுவார்கள். எவ்வாற்றானும் தம் மக்கள் அறிவிற் சிறந்து விளங்கும்பொருட்டு அளவில் ஊக்கங்கொள்வார்கள். இத்தகைய தாய்மார்கள் எந்நாட்டில் பெருகுகின்றார்களோ அந்நாடே சிறப்புடையதாகும். உலகில் பெரும்புகழ் படைத்தவர்கள் வரலாற்றைப் பார்த்தால் இதன் உண்மை புலப்படும்.

நம் தமிழகத்தில் முற்காலத்தில் இத்தகைய தாய்மார் எண்ணிறந்தனர் இருந்தனர். சிலர் சமயத்தை வளர்த்தனர். சிலர் தாய்மொழியாந் தமிழ்மொழியை வளர்த்தனர். சிலர் நல்லொழுக்கத்தை நலமுற வளர்த்தனர். இவ்வாறு சிறந்து விளங்கிய தாய்மார்கள் சிலரின் சரிதையை ஒன்றன்பின் ஒன்றாய்க் காண்போம்.

தமிழ் நிலத்தின் ஒருபகுதிக்குத் திருமுனைப்பாடி நாடென்று பெயர். இந்நாடு பலவகையிலும் முனைத்திருந்ததால் (முற்பட்டிருந்ததால்) இதை இப்பெயர் கொண்டழைத்தனர் என்பர். அந்நாட்டில் வரை என உயர்ந்த மாளிகைகள் உண்டு. அம்மாளிகைகளில் நல்ல அறங்கள் பொருந்திய குல வொழுக்கங்களில் வழுவாத குடிமக்கள் வாழ்ந்து வந்தனர். மண்ணின் புழுதியால் உண்டாகும் துகளன்றி வேறு எவ்வகைத்



தானதுகளுங் கிடையாது. நிலவளங் குன்றாத்திருமுனைப்பாடி நாட்டிற்கு நீர்வளமூட்டுவது பெண்ணையாறாகும். இந்த யாற்றின் இருகரைகளிலும் எம்மருங்கும் வயல்கள் உண்டு. அவ்வயல்களில் அந்நாட்டினர் பெரிய பகடுகள் பூட்டிய ஏர்களால் உழுது கொண்டிருப்பார்கள். இவ்வயல்களில் பெண்ணையாறு மலை நிலத்திலுள்ள மணிகளையும் முல்லை நிலத்தில் மலரும் மலர்களையுங்கொண்டுவந்து குவிக்கும். வயல்களுக்குத் தண்ணீர் தரும் வாய்க்கால்களிலெல்லாம் தகட்டு வடிவாகிய வரால்மீன்கள் பாய்ந்து விளையாடும். கரும்பின் கணுக்களெல்லாம் வெடித்திருக்கும். அதன் வழியாகத் தேன் வெளிப்படும். பக்கங்களிலெல்லாம் செந்நெற்பயிர் விளைந்திருக்கும். பரந்த இடங்களிலெல்லாம் கமுகந்தோட்டங்களுண்டு. நிலத்தையுழுத படைச்சால்களிலெல்லாம் முத்துகளின் கூட்டங்கள் வெளிப்படும். தடாகங்களிலெல்லாம் செங்கழுநீர் மலர்கள் மலர்ந்திருக்கும். வீடுகளின் மேலிடங்களிலிருந்து அகிற்புகையெழும்பும். ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களும் நல்ல விருந்தினர்களையன்புடன் உபசரித்துக் கொண்டிருப்பார்கள். கருவாழை மரங்கள் பெரிய குலைகளைத் தள்ளியிருக்கும். அக்குலைகள் துதிக்கையோடுகூடிய யானையின் முகத்தை யொத்திருக்கும். இவ்வாழைத் தோட்டங்களின் பக்கங்களில் செந்நெல் பயிராகும். செந்நெல்லின் கதிர் வளைந்து தொங்குவதைப் பார்த்தால் குதிரையின் முகத்தை யொத்திருக்

கும். பெரிய வண்டிகள் தேர்களைப்போன்றிருக்கும். வயல்களில் வேலை செய்கின்றவர்களின் ஓசை ஒரு பெரிய சேனையின் ஓசையை யொத்திருக்கும். மேற்கூறிய வகையானே ஒரு வயலின் தோற்றம் நான்கு வகைத்தான படையின் தோற்றத்தை யொத்திருக்கும். பெண்ணையாற்றின் இருகரைகளிலும் நல்ல சோலைகளுண்டு. அச்சோலைகளில் கமுகமரங்களுண்டு. அக்கமுகமரங்களில் பவளம்போன்று பழுத்த பழங்களும் பசியகாய்களும் வெள்ளியபாளைகளும் நீண்ட பச்சோலைகளும் உண்டு. இதன் தோற்றம் பலவகையனவான உயர்கற்களால் இழைத்த அணிகளை யணிந்துகொண்டு விளங்கும் நீண்ட கூந்தலையுடைய மகளிரை யொத்திருக்கும். இச்சோலைகளில் கருமணிகளையொத்த வண்டுகள் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கும். அந்நாட்டினுள் பெரிய தடாகங்கள் உண்டு. அவைகளில் கரிய எருமைகள் வந்துபடியும். தடாகங்களில் படிந்திருக்கும் எருமைகள், சமுத்திரத்தில் நீரைப்பருகும் கரிய மேகங்களைப் போன்றிருக்கும். சிவந்த கண்களையுடைய வரால் மீன்கள் அவற்றின்மேல் குதித்துப்பாயும். இவ்வாறு பாயும் மீன்களை இளங்கன்றுகள் என்று நினைத்து எருமைகள் பால் சுரக்கும். மலர்நிறைந்த சோலைகளில் வண்டின் கூட்டம் வட்டம் வட்டமாய்ச் சுழன்று திரியும். வண்டுகளின் வட்டம் நீலமணிகளால் செய்த பெரிய வளையல் களைப்போன்றிருக்கும். சோலையின் உச்சியில் சந்திரன் வருவது பூமி தேவி சோலைகளாகிய கைகளால்



தன் முகத்தைப் பார்ப்பதற்குச் சந்திரனாகிய கண்ணாடியைப் பற்றிக்கொண்டிருப்பதுபோல் தோன்றும். அந்நாட்டில் மதில்கள் சூழ்ந்த நகரங்கள் பலவுண்டு. அந்நகரங்களில் நெற்போர்களின்மேலும் அழகிய மகளிர் நிறைந்த மாளிகைகளின்மேலும் மயிற்கூட்டங்களும் மேகக்கூட்டங்களுந் தங்கியிருக்கும், தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு எது மயிற்கூட்டம், எது மேகக்கூட்டமென்று எளிதில் புலப்படாது. சைவசமயத்தின் உயர் ஒழுக்கங்களையெல்லாம் நிலைநாட்டிய திருநாவுக்கரசரும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவதாரஞ் செய்வதற்கேற்ற பேறு இத்திருமுனைப்பாடி நாடு செய்திருக்குமானால் இதன் பெருமையை யெடுத்தியம்ப இயலுமோ?

அவ்வைபாடலுக்கு நறுநெய்பால் பெருகி
யருந் தமிழறிவினாற் சிறந்து
பௌவநீராடைத் தரணிமான் மார்பிற்
பயிலு முத்தரியமும் போன்று
மொய்வரால் கெண்டைவாளை சேன்மலங்கு
முதலியசன மெதிர்கொள்ளத்
தெய்வமாநதி நீர்ப்பரக்கு நாடந்தத்
திருமுனைப்பாடி நன்னாடு.

பாவருந் தமிழாற்பேர் பெறுபனுவற்பாவலர் பாதிநாளிரவின்
மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனைத்தொழுத [நன்னாடு
தேவரு மறையுமின்னமுங்காணாச் செஞ்சடைக் கடவுளைப் ]பாடி
யாவருமதித்தோர் மூவரிலிருவர் பிறந்தநாடிந்த நன்னாடு.

வரந்தருவார்,

இத்தகைய சிறப்புகள் வாய்ந்தது திருமுனைப்பாடி நாடு. அந்நாட்டில் பலவளங்களும் நிறைந்த ஊர்கள் பலவுண்டு. அவ்வூர்களில் மேன்மையுற்று விளங்கியது ஒரு ஊர். அதைத் திருவாமூரென்று கூறுவார்கள். தெய்வத்தன்மை பொருந்திய நன் மார்க்கமாகிய செல்வத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தமையால் அப்பெயரை அவ்வூர் பெற்றது.

அத்திருவாமூரில் மகளிர் நுண்ணிடைதான் வருந்தும். மகளிர் காலில் அணிந்து கொண்டிருக்கும் சிலம்புகள்தான் அரற்றும். இடையிலணிந்துள்ள மேகலாபரணத்திலுள்ள சிறுசதங்கைகள்தான் ஒலிக்கும்.

மாளிகைகளின் வரிசைகள் ஓங்கியிருக்கும். குற்றமற்ற அறங்கள் ஒழுங்காக நடந்தேறும். பெருமை தங்கிய குடிமக்கள் நிறைந்திருப்பர். இவைகளைத் தவிர அவ்வூரில் வருந்துவனவும், அரற்றுவனவும், வீணே ஒலிப்பனவும், நிமிர்ந்து நிற்பனவும் பிறகிடையா. வயல்களில் நீலோற்பல மலர்கள் மலர்ந்திருக்கும். நீண்ட வீதிகளிலெல்லாம் அழகிய ஊசல்கள் உண்டு. வைகறையில் உழவர்களின் ஆர்ப்பைக் கேட்கலாம்.

உலகில் ஒப்பற்று விளங்கும் அவ்வூரில் நலங்களில் குன்றாக்குடிமக்கள் பலருண்டு. அக்குடிமக்களுள்ளே பலர் பழிப்பில்லாத நிலைத்த வேளாள குலத்தவர்கள். அக்குலத்தவருள் குறுக்கையர் குடியென்று பெருமை தங்கிய குடியொன்றுண்டு. அந்தக் குறுக்கையர் குடியில் தோன்றிய மாண்புடையவர் ஒருவரிருந்தார்.



அவரைப் புகழனாரென்று கூறுவார்கள். பிற அறங்களிலெல்லாஞ்சிறந்து விளங்கும் இல்லறத்தை நடத்தும் மேம்பாடுடையவர். தம் சுற்றத்தார்களைக் கைவிடாது போற்றும் பண்பினர்.

புகழனார் தமக்குரியதாகிய ஒப்பற்ற குலத்தில் தோன்றியுள்ள மாதினியார் என்ற மங்கையை மணங் கொண்டனர். மாதினியாரும் புகழனாரும் மனமகிழ்ந்து நல்நடையில் குன்றாதவர்களாகி இல்லறத்தை வழுவாது நடத்திவரலாயினார்கள். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன. பின்பு இவர்களுக்கு ஒரு பெண்மகவு பிறந்தது. அம்மகவு இதழ்கள் நிறைந்த செந்தாமரை மலரினிடையில் விளங்குந் திருமகளைப்போன்று பொலிவுற்றிருந்தது. இக்குழந்தைக்குத் திலகவதியார் என்று பெயரிட்டார்கள் பெறற்குரிய தவஞ்செய்தவர்கள்.

இத்திலகவதியார் பிறந்து சில ஆண்டுகள் கடந்தன. தமிழுலகஞ் செய்த தவத்தின் பயனால் திலகவதியம்மையாருக்கு ஒரு உடன் பிறப்பினர் தோன்றினர். அவருக்கு மருணீக்கியாரென்று பெயரிட்டனர். மருணீக்கியாருக்குச் செய்யவேண்டிய சடங்குகளை ஒன்றன் பின்னொன்றாய் இயற்றினர். பின்பு வேண்டும் பொருளைச் செலவிட்டு கலைபயிற்றுவிக்கத் தொடங்கினார்கள். தந்தைக்கு மகிழ்ச்சி பெருகும்படி நாடோறும் பலகலைகளையும் மருணீக்கியார் கற்றுவந்தார். கலைகளைப் பயிலப் பயில அறிவும் வளர்ந்தோங்கிற்று.

இவ்வாறிருக்கும் பொழுது திலகவதியாருக்கு

வயது பன்னிரண்டு ஆயிற்று. கற்றற்குரிய நூல்களையெல்லாங் கற்றுத் தேர்ந்தனர். கல்வியில் தேர்ச்சியடைந்ததற்கேற்ப நன்னடையிலுஞ் சிறந்து விளங்கினர். பிறவுயிர்களிடத்தும் அன்புநிறைந்து விளங்கினர். உள்ளத்தின்கண் கற்பென்னும் திண்மையும் உரங்கொண்டோங்கிற்று. இத்தகைய மேன்மைக் குணங்களையுடைய திலகவதியாரை மணங்கொள்ள வேண்டுமென்று விரும்பினர் கலிப்பகையார்.

இக்கலிப்பகையார் வேளாளர் குலத்திற்கு முதல்வராய் விளங்குபவர். இவரது குலமும் புகழனார் குலமும் ஒத்தகுலங்களேயாம். மின்னலையொத்த சிவந்த சடையையுடைய சிவபெருமானின் உண்மைத் தொண்டில் நாட்டமுடையவர். பொன்னாற் செய்யப்பெற்று மணிகளால் இழைக்கப்பெற்ற முடியையுடைய மன்னனிடத்தில் மனப்பற்று பெரிதுமுடையவர். ஆண்மையில் ஆண் சிங்கத்தை யொத்திருப்பார். யாவரும் விரும்பத்தக்க பேரழகினை யுடையவர். இந்நலங்களெல்லாம் ஒருங்கே வாய்க்கப்பெற்ற கலிப்பகையார் திலகவதியாரிடத்தில் காதல் கொண்டனர். அவ்வாறு தாம்கொண்ட காதலை நிறைவேற்றிக் கொள்ள எண்ணி மேலோர் சிலரைத் திலகவதியாரின் தந்தையாராகிய புகழனார்பால் தூது விட்டனர். அப்பெரியார்களும் கலிப்பகையாரின் கருத்துக்கிசைந்து புகழனார்பால் சென்றனர்.

பெண்பேசவந்த பெரியோர்கள் புகழனாரைக்கண்டு



தாம் வந்த செய்தியை யறிவித்தனர். பெண்ணின் தகப்பனார் மணமகனின் குணங்களைப்பற்றிக் கேட்டுத் தெளிந்த பிறகு குலத்தைப்பற்றி விசாரித்தார். குலத்தின் நலத்தையுங்கேட்டு மனந்தெளிந்த பின்பு திருமகளை யனைய திலகவதியாரை மணஞ்செய்து கொடுப்பதற்கு இசைந்தார். பெண் பேசுவதற்குச் சென்ற பெரியார்கள் புகழனார் தமது அருமைமகளை மணம்புரிந்துதர இசைந்த செய்தியைக் கலிப்பகையாரிடத்திற் சென்று அறிவித்தனர். திருமணத்தை முடிப்பதற்கு ஏற்ற முயற்சிகளைச் செய்தனர். எல்லோருக்கும் எண்ணியது கைகூடுவது இவ்வுலகின் இயல்போ?

இஃது இவ்வாறிருக்கும் பொழுது வடநாட்டரசர் சிலர் திருமுனைப்பாடி நாட்டின் மன்னரோடு போர்பொர வந்தனர், இதையறிந்த வேந்தன் போர்முடித்து மீளும்படி படைத் தலைவராகிய கலிப்பகையாருக்கு ஆணையிட்டான் அரசன் ஆணையைப்பெற்ற வீரரும் சிறிதுந் தாழ்க்காது போர்புரியப் புறப்பட்டனர். மக்களுக்கு மன்னனையன்றி வேறு உயிருண்டோ? அதனாலன்றோ ஔவைப் பிராட்டியாரும்,

நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்
அதனால், யானுயிரென்பதறிகை
வேன்மிகுதானை வேந்தற்குக்கடனே

என்று கூறியுள்ளார்,

உலகில் அறிஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரி

தும் வேற்றுமையுண்டு. அறிஞர் தம் கடமையைத் தான் முதன்மையாகக் கொள்ளுவார்கள். பிறரோ இன்பத்தையே நாடி நிற்பார். அறிஞர் ஒரு வினையைச் செய்வதற்கு முன் பன் முறை யெண்ணி யெண்ணி யாராய்வர். ஆராய்ந்ததன் பிறகே துணிவு கொள்வர். துணிவுகொண்டு ஒரு காரியத்தைச் செய்ய முற்படுவாராயின், தம்முயிரையுமதியாது முன்னிய காரியத்தை முடித்தே தீர்வர். இவ்வுண்மையைக் கலிப்பகையார் வரலாற்றில் காணலாம். போருக்குச் சென்ற கலிப்பகையார் தம்முடன் பலபடைகளையும் உடனழைத்துச் சென்றார். சில நாட்களில் போர் முனையை யடைந்தார். சினத்தபகைஞர்களுடன் தொடர்ந்து போர் செய்தார். போரும் பல நாட்கள் நீட்டித்திருந்தது. கலிப்பகையாரும் மணம் முதலியவற்றில் மனஞ் செலுத்தாதவராய்க் கடும் போரிலேயே கருத்தூன்றி நின்றனர்.

இவ்வாறு வடக்கே இடைவிடாது போர் நடந்துகொண்டிருக்கையில் திருவாமூரில் திலகவதியாரின் தந்தை நோய்வாய்ப்பட்டார். சில நாள் இந்நோயால் துன்புற்று உழன்று இறுதியில் மண்ணுலகைத் துறந்தார். இவ்வுலகில் யார்தான் நிலைத்திருக்க முடியும்? பிறந்தோர் இறத்தல் என்றும் உள்ள முடிபேயாம். அரசனும் இறப்பன், ஆண்டியும் இறப்பன். ஆணும் இறக்கும், பெண்ணும் இறக்கும், இளைஞரும் இறப்பர், முதியோரும் இறப்பர். மேலே எறிந்த கல் கீழே விழுவது இயற்கையன்றோ? மணமகன் பிணமகனா



தலும் மணவொலி பிணவொலியாதலும் இயற்கை. ஒரு வீட்டில் மணவோசை முழங்குதலும், மற்றொரு வீட்டில் சாப்பறை முழங்குதலும் புதியனவல்ல. மணங்கொண்ட மகளிர் பூவணியை அணிந்துகொள்தலும், நாயகனைப்பிரிந்த நங்கை அழுது புலம்புதலும் என்றுங் காணுங்காட்சியன்றோ?

*ஓரினெய்தல் கறங்கவோரி*
*லீர்ந்தண் முழவின் பாணிததும்பப்*
*புணர்ந்தோர் பூவணியணியப் பிரிந்தோர்*
*பைதலுண்கண் பனிவார்புறைப்பப்*
*படைத்தோன் மன்றவப் பண்பிலாள*
*னின்னாதம்மவிவ் வுலக*
*மினியகாண்கித னியல் புணர்ந்தோரே.*

பக்குடுக்கை நன்கணியார்.

புகழனார் பூதவுடலைத் துறந்தனர்; அவர் புகழுடம்பைத் துறந்திலர். அவருடைய பெயரே இதைப் புலப்படுத்தும். பிறந்தாரெல்லாம் பிறந்தாராவரோ? புகழுக்கு உரியன புரிந்தாரே பிறந்தாராவர். ஏனையோரெல்லாம் பிறந்தும் பிறவாதவரே.

*தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்*
*தோன்றலிற் றோன்றாமை நன்று.*

திருவள்ளுவர்.

இவர் மனைவியாராகும் மாதினியார் தம் கணவன் உயிர் நீத்த பிறகு, சிறிதும் உயிர் தரித்தாரில்லை. தம் மக்களையும் சுற்றத்தையும் பொருளாக நினைந்தாரில்லை. மக்களுஞ் சுற்றமும் கணவனிருக்கும் வரையிலுந்தான்

இன்பமளிக்கும். கற்புடைய நங்கைக்குக் கணவனை விட உயர் பொருளுமுண்டோ? கணவன் இறந்தவுடன் உயிர் நீத்தல் தான் தலையன்பாகும். 'சாவிற் சாதல்' தலையன்பிற்கு அறிகுறியன்றோ? சாவிற் சாதலும் பல்திறப்படும். பிணியுடையாளொருத்தி கணவனீங்கிய பின்னும் இருத்தல் நலமன்றென்று உயிர் நீத்தலும் ஒன்றாம். கொண்டான் உயிர் துறந்த பின்னும் கூந்தலில் வாசனைத்தைலந்தடவி, நறுமலர் சூடி, உணவு உட்கொண்டு உயிர் தரிக்கின்றனளே என்னும் உலகபழிமொழிக்கஞ்சி உயிர் துறத்தலும் ஒன்றாம். புருடனோடு இறந்தால் புகழ் உண்டாகுமென்று மாளுதலும் ஒன்றாம். கணவனோடு மாண்டால் சுவர்க்கம் புகலாமென்று மாளுதலும் ஒன்றாம். இவ்வாறு உயிர் துறத்தலெல்லாம் அன்பின்பாற்படாது. காரணமின்றி நாயகனோடு உயிர் துறத்தலே நலமிக்க அன்பாகும். அவ்வாறு ஒரு பொருளினிடத்து ஒப்புபர் வற்ற அன்புடையாருக்கு ஏனைய பொருள்களிடத்து பற்று ஊன்றியிருத்தல் இயலாது. ஆதலாற்றான் மாதினியாரும் தம் கொழுநனிடத்தில் கொண்ட அன்பின் மிகுதியால் தம்சுற்றத்தையும் மக்களையும் துகளாக வெண்ணி உயிர் துறந்தார்.

இளைஞர்களாகிய திலகவதியாரும் மருணீக்கியாரும் அடைந்த துயரத்திற்களவின்று. நெருப்பினிடை அகப்பட்டுக்கொண்ட மயில்போல் திகைத்தனர். கூரிய அப்பு பாய்ந்த இளம் மானைப்போன்று பதை



பதைத்தனர். தாய் தந்தையரை நினைந்து நினைந்து கண்ணீர் சொரிந்தார்கள். தனியே விட்டு விட்டுச் சென்றீர்களோ வென்றார்கள். இச்செய்தியை யறிந்த கிளைஞர்களெல்லாம் வந்து குழுமினர். இச்சிறுவர் படுந்துயரத்தைக்கண்டு மனம் ஆற்றாதவர்களாகி அவருங் கலங்கினர். பின்பு மனந்தெளிந்து திலகவதியாரையும் மருணீக்கியாரையும் ஒருவாறுதேற்றத் தலைப்பட்டனர். உலகில் எத்துணைக்காலம் இருப்பினும் இறத்தல் இயற்கையன்றோ? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டோர் வருவரோ? என்று பல மொழிகளைக்கூறி இளைஞர்களைத் தேற்றினர். இம்மொழிகளைக் கேட்ட சிறுவர்களும் ஒருவாறு மனந்தெளிந்தனர். இறந்தார்க்கியற்ற வேண்டிய கடன்களனைத்தையும் வழுவாதியற்றினர். இவ்வாறு செய்ய வேண்டியவைகளை யெல்லாஞ் செய்து, நேர்ந்ததுக்கங்களை யொருவாறு மறந்து வருகின்ற காலத்தில் மற்றொரு நிகழ்ச்சி நேர்ந்தது. பட்டகாலிலே படுவதும் கெட்ட குடியே கெடுவதும் உலகவுண்மையன்றோ?

அரசன் ஆணையைமேற்கொண்டு போர்முனைக்குச் சென்ற கலிப்பகையார் பகை மன்னர்களுக்குப் புறங்கொடாது போர்புரிந்து பகைஞர்களை யெஞ்சுதலின்றிக் கொன்றனர். அவ்வாறு அவர்களை முறியடித்து வெற்றி கொள்ளும்பொழுது கலிப்பகையாரும் உயிர் துறந்தனர். கடனைமேற்கொண்டவர் உயிரைப் பொருட்படுத்துவரோ? அரசருக்கு இயற்றவேண்டிய பணியை

மணமுவந்து ஆற்றினர். அவர் பூதவுடம்பழியினும் புகழுடம்பழியவில்லை. வீரசுவர்க்கம் புகுந்த அவரது கீர்த்தியெங்கும் பரவிற்று. ஊரெல்லாம் அவரைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். இச்செய்தியைச் சிறப்புகள் வாய்ந்த திலகவதியாரும் கேட்டார். என்செய்வார்? எதை நினைத்துப்புலம்புவார்? தந்தையை நினைந்து அழுவாரா? தாயை நினைந்து அழுவாரா? தனக்குத் தம் தந்தையார் குறித்து வைத்திருந்த மணமகனையெண்ணிப் புலம்புவாரா?

திலகவதியாரின் தந்தையார் கலிப்பகையாருக்குத் தம் மகளை மணமுடிப்பதாக நிச்சயித்திருந்தார். அவ்வாறே கலிப்பகையாரும் இவ்வம்மையாரை மணந்து கொள்ள உறுதி கொண்டிருந்தனர். என்றைக்குப் புகழனார் இவ்வாறு தீர்மானித்தனரோ அன்றைக்கே திலகவதியாரும் தம் முயிரை அக்கலிப்பாகையருக்கே உரிமையாக்கிவிட்டனர். மாண்புடைய நங்கைக்கு மனத்தால் நினைத்தலும் போதாதோ? இப்பொழுது கலிப்பகையார் வீரசுவர்க்கம் புகுந்த செய்தியைக் கேட்டுப் புலம்பும் திலகவதியாரும், அவருடன் சுவர்க்கம் புக எண்ணிவிட்டனர். இதையறிந்தார் மருணீக்கியார். விரைந்தோடிவந்து தமக்கையின் திருவடியில் விழுந்து அழுது தொழுதார். தமக்கையாரின் திருவடிகளைப் பற்றினபடியே நீண்ட நேரங்கிடந்து அழுதார். "தாயுமிறந்தனர்; தந்தையுமிறந்தனர். இனித்துணையென்றிருக்கும் நீங்களும் இவ்வாறுசெய்தால் நான் உங்களுக்கு



முன்பாகவே உயிரைவிட்டுவிடுவேன்," என்று கூறினர். தம்பியார் கூறும் இம்மொழிகளைக்கேட்ட தமக்கையார் என் செய்வார்? சிறிது இரக்கமுங்கொண்டனர். தாம் எண்ணியபடியே உயிரைத் துறந்தால் தம்பியாரும் உயிர்விட நேரிடுமேயென்று எண்ணினர். தாம் துன்புற்றாலும் பிறர் துன்புறுவதற்குச் சகிப்பரோ பெரியோர். பலவாறாகச் சிந்தித்து உம்பருலகடையாது இம்பருலகில் தம்பியின்பொருட்டு உயிரோடிருக்க இசைந்தனர். பிறனொருவனை மணஞ்செய்துகொள்ள இசைந்தாரில்லை. தம்முடைய வீட்டிலே இருந்து ஐம்புலன்களையுமடக்கித்தவஞ்செய்துகொண்டிருந்தார்.

மக்களுக்கு இரண்டு பகைகள்உண்டு. அவைகளை உட்பகையென்றும் புறப்பகையென்றுங் கூறுவர். உட்பகை புறப்பகையைவிட வன்மையுடையது. ஒருவன் புறப்பகையை வெல்லலுங்கூடும். ஆனால் உட்பகையை யடக்கி யாளுதலோ அரிதாகும். அவ்வுட்பகைதான் மெய், வாய், கண் மூக்கு, செவியென்ற ஐந்து பகுப்புகளாய் அமைந்துள்ளது. ஒன்றின் செயல் தளர்ந்தால் மற்றொன்றின் செயல்மிகுந்து நிற்கும், இப்படியே ஒன்றன்பின் ஒன்று முனைத்து நின்று மக்களைத் தீயவழியிலெல்லாம் புகுத்தித் துன்பப்படுத்தும். இவைகள் நமக்குத் துன்பத்தைப் பயக்குகின்றனவே என்று அவைகளை ஒழித்துவிடலுமாகாது. எவனொருவன் இவைகளையடக்கி யாளுகின்றானோ அவனே சிறந்தவீரன். நாக்கிற்கு விரோதமாயிருப்பன

முப்பத்திரண்டு பற்கள். அவ்வாறு இருப்பினும் நாக்கு உண்பொருளின் உருசியை யறிந்துகொள்வதற்குப் பற்களைக் கருவியாகக் கொண்டுள்ளது. அதுபோன்றே நல்லறிஞர் மேற்கூறிய ஐந்தையுமே துணையாகக் கொண்டு பெறுதற்கரிய பெரிய இன்பத்தைப்பெறுவர். அவ்வாறு அவைகளை யடக்கியாளுவதற்கேற்ற வழி யெது? அதைத்தான் அறிஞர் தவம் என்பர். தவமென்றால் என்ன? தமக்கு வருந்துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும் தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ்செய்யாமையுந்தான் தவமென்று கூறப்படும்.

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றேதவத்திற் குரு.

திருவள்ளுவர்.

இடைவிடாது தவத்திற்பழகினால் முன்னர்க்கூறிய ஐம்பொறிகளும் தன்வயப்பட்டிருக்கும். வேண்டுங் காலத்து உபயோகிக்கவும் வேண்டாத காலத்து அடக்கிக்கொள்ளவுங்கூடும். ஆமையைப்போன்றிருத்தல்வேண்டும். ஆமையானது தனது ஐந்து உறுப்புகளையும் இடர் உறாமல் உள்ளே இழுத்துக்கொள்ளுதல்போல் மக்களும் தம் ஐம்பொறிகளையும் பாவக் கடலிற்புகாமல் அடக்குதல்வேண்டும். அவ்வாறு இப்பிறப்பில் பழகிவிட்டால் அப்பழக்கம் எப்பொழுதும் உடனின்று உதவும்.

ஒருமையு ளாமைபோ லைந்தடக்கலாற்றி
னெழுமையுமேமாப் புடைத்து.

திருவள்ளுவர்.



இவ்வாறு திலகவதி யம்மை[illegible]ட்டிலேயே தவஞ்செய்துகொண்டு வந்தனர். மருணீக்கியாருக்குண்டாகிய மனக்கலக்கத்தையும் மறதி யென்பான் நாளடைவில் மாற்றினன். உலகநிலையாமையையும் நன்குணர்ந்தார். வேண்டிய திரவியங்களைச் செலவு செய்து பலவகைத்தான தருமங்களை யியற்றினர். இதனுடனில்லாது பல அற நூல்களையும் பயின்றுவந்தார். கொல்லாமை மேற்கொண்டொழுகும் சமணசமயத்தில் விருப்பங் கொண்டனர். அக்காலத்தில் அச்சமயம் மிகுதியாய்ப் பரவியிருந்தது. பாடலிபுத்திரம் என்னும் பதியையடைந்து ஆங்குள்ள சமணர்கள் பள்ளியி[illegible] புகுந்து ஆன்றோர்கள் உரைகளைக்கேட்டார் [illegible]வர்க[illegible] சமய நூல்கள் பலவற்றையுங் கற்[illegible]ந்தனர். சமணர்களும் மருணீக்கியாருக்குத் [illegible]ம[illegible]னர் என்ற பட்டமளித்துப் பெரிதும் போ[illegible]

இவ்வாறு மருணீக்கியார் [illegible]புரத்தில் தங்கி யிருக்கும்போது திலகவதியார் [illegible]ய நிலையைப் பலவாறு எண்ணிப்பார்த்தனர். [illegible]திருத்தல் [illegible]மன்று என்று உணர்ந்தனர்.

பெண்களைப் பெரியார் கொடியென்று கூறுவா ரன்றோ? கொடி யெவ்வாறு கொம்பைச் சூழ்ந்து சுற்றியிருத்தல் இன்றியமையாததோ அஃதே போன்று நங்கையரும் நாயகனைச் சார்ந்திருத்தல் வேண்டும். பற்றுக்கோடில்லாத கொடி கீழேவிழுந்து பலராலும் மிதித்துத் துவைக்கப்படுதல் போன்றே பற்றுக்கோடில்லாத நங்



175443

கையரும் பலவகைத்தான இடருக்கும் உட்படநேரிடும். ஆதலால் தாய்தந்தை முதலியவர்களை யிழந்துவிட்ட திலகவதியாரும் பற்றுக்கோடில்லாது தனித்திருத்தற்கு இசையவில்லை. பற்றுவதற்கு ஏற்ற ஒரு பலமான பொருளைப்பெற விரும்பினர். அப்பொருள் தமதுஉட்பகையை ஒழித்துத் தம்மைக்காக்கும் வீரமுடையதாக இருக்கவேண்டுமென்று எண்ணினார். அப்படி எண்ணியபொழுது ஒருஇடம் அவர் நினைவிற்குவந்தது. அது ஒரு வீரட்டானம் (வீரஸ்தானம்). சிவபெருமானுக்கு உரிய எட்டு வீரட்டானங்களுள்ளும் சிறப்புடையது. அதனாற்றான் அதனைப் பெரியோர்கள் திருவதிகை வீரட்டானம் என்று கூறுவார்கள். அதன் பொருள் உயர்வுடைய மிகுதியான வீரத்தையுடைய ஸ்தானம் என்பதாம். அது நீர்நிறைந்த கெடில நதியின் வடகரையிலுள்ளது. சிறப்புகள் செறிந்த அவ்விடத்தையடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பணிந்துபோற்றிப் பந்தபாசங்களைப் போக்கக் கருதினர். பலதுன்பங்களுக்குங் காரணம் பந்தபாசமன்றோ? அஃதெவ்வாறு ஒழியும்? பந்த பாசமற்ற ஒருவனையடைந்தாலன்றிப் பந்தபாச மறுமோ; அறாது.

இன்பமிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங்கெடின்.

சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தருநோய்.

திருவள்ளுவர்.



திலகவதியார் திருவதிகையை யடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள செம்பவளக் குன்றையொத்த சிவபெருமானடியில் வீழ்ந்து வணங்கினார். சிவ சின்னங்களையும் தாங்கினார். அப்பெருமானிடத்திற்கொண்ட அன்பு மிகுதியால் நிலைபெற்ற பல திருத்தொண்டுகளைச் செய்யத் தொடங்கினார்.

அரனார் அடிகளைப் பெறுவதற்குரிய படிகள் நான்கு. அவைகளை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பார்கள். இந்நான்கும் ஒன்றிற்கொன்று ஆதாரமாயிருப்பன. சரியை கிரியைக்கும், கிரியையோகத்திற்கும், யோகம் ஞானத்திற்கும் ஆதாரமாயுள்ளன. இந்நான்கும் அரும்பு, மலர், காய், கனி போன்றனவாகும்.

விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே.

தாயுமானவர்.

அவற்றுள் சரியையாவது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்குச்செல்லுதல், விடிவதற்குமுன் அலகிடுதல், மெழுகுதல், நந்தனவனத்திற்குச் சென்று மலர் கொய்தல், பூமாலை தொடுத்துக்கொடுத்தல், ஆலயத்தை வலம் வருதல், தீபமிடுதல், தூபம் போடுதல், கும்பிடுதல், ஆனந்தக் கூத்தாடுதல் முதலியன செய்வதாம்.

நிலைபெறுமாறெண்ணுதியே னெஞ்சே நீ வா
நித்தலு மெம்பிரானுடைய கோயில்புக்குப்

புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சய போற்றி போற்றியென்று
மலைபுனல்சேர் செஞ்சடை யெம்மாதீயென்று
மாரூராவென் றென்றேயலறா நில்லே.

திருநாவுக்கரசர்.

கிரியையாவது சிவபெருமானுக்கு அன்போடு அபிடேகம் அருச்சனை முதலியன வியற்றிப் பூசை புரிதலாகும். இவ்வாறு பூசை புரிவதற்கு வேண்டப்படுவதாயுள்ள சில இன்றியமையாத அங்கங்கள் உண்டு. கொல்லாமை, கள்ளாமை, பொறுமை, வாய்மை, நாண், அன்பு, அடக்கம், ஈகை முதலியனவாம். இக்குணங்களெல்லாம் பொருந்தி இறைவனது பூசனை யியற்றினார் இன்பமுறுவர்.

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
விட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடையானுள னாமுளோ
மெற்றுக்கோ நமனார் முனிவுண்பதே.

திருநாவுக்கரசர்.

யோகமாவது சீவான்மா இன்ப வேட்கையினால் பரமான்மாவோடு பொருந்தியிருத்தலாம். இவ்வாறு பொருந்தியிருத்தல் எளிதன்று. புறத்தே செல்லும் மனதைத் தன்வயப்படுத்தி, குறித்த பொருளோடு ஒன்றுபடுத்துதல் அரிது அரிது. இது எட்டங்கங்களையுடையது அவைகளை முறையே இயமம், நியமம்,



ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்று கூறுவர். யோகப்பயிற்சியுடையார் உடல் உரம் பெற்றிருக்கும்.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மலமாக்கி
லுறுப்புச் சிவக்கு முரோமங்கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே.

திருமூலர்.

வாயுநிற்ப மனநின்று மனந்தானிற்பப் பொறிநின்று
பாயபொறி கணிற்ப விடர்படு புன்புலன் கணின்றனவா
லாயபுலன் கணின்றமையா லகிலந் தோன்றாதுள்ளத்தே
தூய பரமானந்த பரஞ்சோதி தோன்றக் கண்டிருந்தார்.

துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

இதற்கு அடுத்து நிற்பது ஞானமாகும். நல்லற நூல்களைத் தக்காரிடத்துக் கேட்டும், கேட்டவைகளை யிடைவிடாது சிந்தித்தும், பின்தெளிந்தும், தெளிந்த பின் நிட்டை கூடுதலுமாம். ஞானம் பெற்றவர் இறைவனது சாயுச்சியநிலையைப் பெறுவர். ஞானம் கைவரப்பெற்றவர் பித்தர் போன்றிருப்பர். பொய்யுலகம் அவரைப் பழிக்கும். அவர் பொய்யுலகத்தைப் பழிப்பர். இவைகளைப்பற்றிப் பதிநூல்களில் விரிவாய்க் காணலாம்.

வல்லனென்றிருப்பினுமிருக்கும் வன்மையோன்
றில்லனென்றிருப்பினுமிருக்கு மெள்ளுறப்
புல்லனென்றிருப்பினுமிருக்கும் புண்ணிய
நல்லனென்றிருப்பினுமிருக்கு ஞானியே.

துறைமங்கலம் சிவப்பிரகாசர்,

தவநெறியில் நின்ற திலகவதியாரும் சரியை நிலையில் தளராது அரிய பணிகள் பல செய்தார். பொழுது விடிவதற்குமுன் தினந்தோறுமெழுந்து கெடிலநதியில் மூழ்கிவிட்டுத் திருக்கோவிலின் உள்ளும் புறம்பும் தூசுபோகத் திருவலகிடுவர். நல்ல பசுவின் சாணத்தால் நன்றாய் மெழுகிடுவார். பிறகு நந்தனவனத்திற்குச்சென்று மலர் கொய்து, மாலைகள் தொடுத்திடுவார். பலரும் புகழும்படி உயர்ந்த திருத்தொண்டுகளைச் செய்துவந்த அம்மையாரின் உள்ளத்தில் ஒரு குறை ஊன்றிக்கிடந்தது. அஃது தம்முடைய தம்பி மீண்டுஞ் சைவசமயத்திற்கு வரவேண்டுமென்ற ஒரு குறைதான் அக்குறையைக் களையும்படி நாள்தோறும் கடவுள் முன்னிலையில் பிரார்த்தித்து வந்தார். இவருடைய வேண்டுகோளுக்கிரங்கிய சிவபிரானும் திலகவதியாரின் மனக்கவலையைமாற்ற திருவுள்ளம் பற்றினார். அம்மையாரின் கனவில்தோன்றி உம்முடைய தம்பியைச் சூலை நோயால் ஆள்வோமென்று அருளிச்செய்தனர். திலகவதியாரும் அம்மொழிகளிடத்து முழு நம்பிக்கை கொண்டிருந்தனர். சிவபெருமான் அறிவித்தவாறே மருணீக்கியாருக்குச் சூலைநோயுண்டாயிற்று. என்செய்வார்? பலவகையான சிகிச்சைகளையும் அமணர் செய்தனர். ஒன்றும் பயன்படவில்லை. அமணர்களும் அரிய சூழ்ச்சிகளை யெல்லாஞ் செய்தார்கள். செய்தாவதென்? குழுமியிருந்த சமணர்களெல்லாம் ஒருவர்பின்னொருவராய், மருணீக்கியாரைத் தனியே விட்டுவிட்டு அகன்ற



னர். மருணீக்கியாரும் பழைய நிலைமையை உன்னினார். உன்னிப் பார்க்குமளவில் தம்முடைய தமக்கையாரின் நினைவுவந்தது. தமக்குச் சமையல் தொழில் செய்கின்ற வனையழைத்துத் தனக்கு நேர்ந்துள்ள இடரைத் தமக்கைக்குத் தெரிவிக்கச் சொன்னார். மருணீக்கியார் கட்டளையிட்டவண்ணமே சமையல் தொழில் செய்வோனும் திருவதிகையை யடைந்தான். திலகவதியாரைத் தேடிப் பார்த்தான். அவர்கள் மலர் மணம் செறிந்த ஓர் நந்தனவனத்தினருகில் வந்துகொண்டிருந்தார்கள். அவ்வம்மையாரைக் கண்டு வணங்கி, தங்கள் தம்பியார் கட்டளையினால் இங்கு வந்தேனென்றான்; உடனே தம்பியாருக்கு ஏதேனும் தீங்குண்டோவென்று கேட்டனர். "அவருக்கு ஒரு சூலைநோய் தோன்றியுள்ளது. அது அவரைக் கொன்றபாடும் இல்லை; விட்டபாடும் இல்லை. குடலோடு சுருட்டி யிழுத்துக்கொண்டு தான் புறத்துவதை யறிந்த சமணப் பெரியார் பலவகையான மருந்துகளைத் தந்தனர். மந்திரங்களை யெல்லாம் உபயோகித்தனர். ஆனால் ஒன்றும் பயனளிக்கவில்லை. ஆதலால் தங்களைக் கண்டு அறிவித்து உய்யும் வழி அறிந்து பொழுது போனவுடன் வரச்சொன்னார்," என்று கூறினன். இவ்வாறு சொன்னவளவில் திலகவதியார் "உன்னோடு சமணர்கள் பள்ளிக்கு வரவியலாது" என்று தீரமாய்க் கூறினார். தம்பியாரிடத்தில் பற்றின்மையால் இவ்வாறு கூறினரோவென்று ஐயுறுதலாகாது. இறைவனிடத்தில் கொண்ட முழு நம்பிக்கை

யும், அங்கு சென்றால் அச்சமணர் தீங்கு செய்வார் என்ற துணிவுங்கொண்டே இவ்வாறு கூறினர். தம்முடைய கனவில் உணர்த்தியபடியே இறைவன் தம்பியாரை ஆட்கொள்வாரென்ற திடநம்பிக்கை யிருந்தது. அப்படிக்கில்லாது தம்பியாருக்கு உதவி செய்யும் பொருட்டுத் தான்போய் இருந்திருப்பின், அவ்வம்மையாருக்கு இவ்வளவு புகழுக்கு ஏது வழி? 'தான்' என்ற முனைப்பு தோன்றுமிடத்தில் ஆண்டவன் உதவுவதில்லை. 'தான்' என்ற முனைப்பு அற்றவிடத்தில் அவனது துணைவலிந்து வந்து உதவுமன்றோ?

திலகவதியார் கூறிய மொழிகளை யெல்லாம் மருணீக்கியாரிடத்தில் வந்து அறிவித்தனன் பணியாளன். அவரும் சிறிது மனக்கலக்கங்கொண்டனர். இனி என்னசெய்யலாமென்று பலவாறு எண்ணினர். தமக்கு இடைவிடாது துன்பஞ் செய்துகொண்டிருக்கும் நோயை ஒழிக்க எண்ணி, சமணர்கள் பள்ளியைவிட்டுவிலக எண்ணினர். தம்முடைய தமக்கையாரின் திருவடிகளை யடையத் துணிந்தனர். சமணர்களின் சின்னங்களை யெல்லாம் அறவே யொழித்துவிட்டார். ஏவலாளன் தோள்களைப் பற்றிக்கொண்டு தளர்ந்த நடையராகித் திருவதிகையை நோக்கி இரவிலேயே புறப்பட்டு வந்தார். சூலை நோயும் இவரைவிடாது உடன் தொடர்ந்தது. தமக்கையாரைக் காணவேண்டுமென்ற விருப்பு அதிகரித்தது. மதில்களால் சூழப்பெற்ற திருவதிகையிற்புகுந்து திலகவதியாரின் திருமடத்தை



யடைந்தார். திலகவதியாரின் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். நம்முடைய குலத்தவர்கள் செய்த தவப்பயனெல்லாம் ஒரு வடிவங்கொண்டதுபோலுள்ள அம்மையே! அடியேன் படுந்துயரைக் களைந்து, உய்ந்து கரையேறும்படி அருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். தம்பியார் இவ்வாறு அடிகளில் விழுந்து பணிந்தவுடன் திலகவதியார் திருவதிகையிலெழுந்தருளியிருக்கும் பிரான் திருவருளை நினைந்துக் கைதொழுதார். பிறகு தம்முடைய தம்பியாரைப் பார்த்து, நற்கொள்கையில்லாத புறச்சமயக் குழியில் விழுந்து விட்டீர். எழுந்தருளுமென்று கூறினர். இவ்வருள் மொழிகளைக் கேட்டவுடனே நோயினால் உண்டாகிய மிகுந்த நடுக்கத்துடன் எழுந்தார். அப்போது மருணீக்கியாரைப் பார்த்து இந்நோய் உம்மையாட்கொள்ளும் பொருட்டு ஆண்டவனால் அளிக்கப்பெற்றது. ஆதலால் அடுத்தவர்களை விடுத்திடாது ஆதரிக்கும் விடையூர்தியைப் பணிந்து வணங்குகவென்று திலகவதியார் திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவன் எல்லா வுயிர்களிடத்திலும் இடைவிடாது கருணை கொண்டுள்ளார். அவ்வாறு கொண்டுள்ள கருணையைச் சிலரிடத்தில் இன்பமயமாக வெளியிடுகிறார். மற்றுஞ்சிலரிடத்தில் துன்பமயமாக வெளிப்படுத்துகிறார். நடுவுநிலையினின்றும் வழுவி அவ்வாறு இயற்றுகின்றனரோவென்றால் இல்லை. அவரது சந்நிதியில் அரசனென்றும் அடிமையென்றும், ஆணென்றும்

பெண்ணென்றும் பேதங்கிடையாது. முதியோரென்றும் இளைஞரென்றும் ஏற்றத்தாழ்வு கிடையாது. ஆனால் அவரவர்காட்டும் அன்பிற்கேற்றவாறு பயனளிப்பார். பொன்னைத் தூய்மைப்படுத்துவதற்குப் புடம்போடுவது போலவே, மக்களைத் தூய்மைப்படுத்துவதற்கே அவர் துன்பத்தைத்தருவர். அவர் இன்புறு அடிகளில் அன்புற்றிருப்பதற்காகத்தான் இன்பத்தை இறைவனா ரளிப்பர். இன்பத்தைத்தந்து ஆட்கொள்ளும் கருணையை அறக்கருணையென்பர். ஆகவே ஆண்டவன் ஆன்மாக்களுக்குத் துன்பந்தருவது அவைகளை நல்வழிப்படுத்தியாட்கொள்ளுவதற்கேயாம்.

நிக்கிரகங்கடானு நேசத்தா லீசன்செய்வ
தக்கிரமத்தாற்குற்றமடித்துத்தீர்த்தச்சம்பண்ணி
யிக்கிரமத்தினாலே யீண்டறமியற்றிடென்ப
னெக்கிரமத்தினாலு மிறைசெயலருளே யென்றும்.
தந்தை தாய் பெற்றதத்தம் புதல்வர்கடஞ்சொலாற்றின்
வந்திடாவிடினுறுக்கிவளாரினாலடித்துத்தீய
பந்தமுமிடுவரெல்லாம் பார்த்திடிற் பரிவேயாகு
மிந்தநீர்முறைமையன்றோ வீசனார்முனிவுமென்றும்.

அருணந்தி தேவர்.

திலகவதியார் இவ்வாறுகூறியவுடன் மருணீக்கியார்மீண்டும் தமக்கையாரை வணங்கினார். தவத்திற்சிறந்த அம்மையாரும் நின்மலன் திருவருளைச்சிந்தித்து திருவதிகையினாலயத்துட் புகுவதற்குக்கயிலைமலையிலெழுந்தருளியிருக்கும் கண்ணுதலினடிகளை நினைத்து, திருவெண்



ணீற்றைத்திருவைந்தெழுத்தையுச்சரித்துக்கொடுத்தருளினார். திலகவதியார் அருளுடன் அளித்த திருநீற்றை மிகுந்தபணிவுடன் ஏற்றுத்தம்முடல் முழுவதும் அன்புடன் அணிந்துகொண்டார். தம்முடைய துன்பத்தை நீக்கும் தமக்கையார் முன்செல்லத் தாம்பின்னே சென்றார். மருணீக்கியாரின் அகத்தின் இருளும் இராக்காலத்தின் இருளும் நீங்கும் தருணம் நெருங்கிற்று. திருவதிகைப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தை அலகிட்டு மெழுகுவதற்குத் திலகவதியார் திருவலகையும் மெழுக்குத் தோண்டியும் கையில் தாங்கிக்கொண்டுத் தம்மை யடைக்கலமாக வந்தடைந்த மருணீக்கியாரையும், உடன் அழைத்துக்கொண்டு ஆலயத்தினுள் வந்து சேர்ந்தார். சிவபெருமான் எழுந்தருளியிருக்குமிடத்தை வலம்வந்தனர். சந்நிதியில் வந்து வீழ்ந்து பெருமானது அடிகளைப் பணிந்தார். கண்ணுதலின் கருணையால் அரியபாசுரங்களைப் பாடுஞ் சக்தியைப்பெற்றனர்.

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல
  செய்தன நானறியே
னேற்றாயடிக்கே யிரவும் பகலும் பிரியாது
  வணங்குவனெப் பொழுதும்
தோற்றாதென்வயிற் றினகம்படியே
  குடரோடுதொடக்கி முடக்கியிட
வாற்றேனடியே னதிகைக்கெடில
  வீரட்டானத் துறையம்மானே.

என்பது முதலாகவுள்ள பாசுரங்களடங்கிய பதிகத்தைப் பாடத்தொடங்கினார். சூலைநோயும் தொலைந்தது. திருநாவுக்கரசர் என்ற திருப்பெயரையும் பெற்றார். அரனாரிடத்து அன்புமிகுந்து அரும்பணிகளியற்றினர். அடியார்களுக்கெல்லாந் தலைவராய்த் திகழ்ந்தனர். சமயகுரவர் நால்வரில் ஒருவராகும் பேறும் பெற்றனர்.

மருணீக்கியார் யாவராலும் போற்றப்படும் இவ்வளவு உயரிய நிலையைப்பெற்றது திலகவதியாராலன்றோ? திலகவதியார் கல்விகேள்விகளில் சிறந்து ஒழுக்கத்திலுயர்ந்து அன்பு, அருள், வாய்மை, வைராக்கியம் முதலிய திப்பிய குணங்களைக்கொண்டு ஒழுகியமையால் அன்றோ மருணீக்கியாரை அருளுடையாராகிய அப்பராக்கும் ஆற்றல் பெற்றனர். இவ்வம்மையார் திருவதிகையிலேயே பின்னும் சிலகாலந்தங்கி, இடையறாது திருத்தொண்டுபுரிந்து, இறைவனது இணையடிகளையடைந்தனர்.

இவ்வம்மையாருக்கிருந்த மனத்திண்மையும் மயக்கமின்மையும் இக்காலத்தில் நம் நாட்டுப் பெண்மணிகளில் எத்தனை பேருக்குண்டு? இவ்வம்மையாரின் உயர் வரலாற்றிலிருந்து நாம் உணர்ந்துகொள்ளக்கூடிய நுண்பொருள்கள் பலவாம்.

பெற்றோர்களின்மனக்குறிப்பின்படி தம்மை, கலிப்பகையாருக்கே உரிமையாக்கினர். தமக்கென்று குறித்துவைத்திருந்த நாயகன் இறந்தவுடன் தாமும் இறக்கத் துணிந்தனர். தம்பியாரிடத்து வைத்த இரக்கத்தினால்



உயிர் தாங்கிக்கொண்டிருந்தனர். தம்பியாரும் தம்மைவிட்டகன்றபிறகுஎல்லாம்வல்ல இறைவனையேஉறுதுணையாகக்கொண்டொழுகினர். அவ்வாறு இறைவனருளைநாடிநிற்கும்போதும் தம்முடைய நலத்தைக் கருதாது தம்பியாருடைய நலத்தையே நாடி நின்றனர். தம்கோட்பாட்டினின்றும் திறம்பிய தம்பியார் மீண்டும் தம்மிடம் வந்தபொழுது அவரை வெறுக்காது அன்புடன் ஏற்று ஆட்கொண்டனர். இத்தகைய சிறந்த குணங்களெல்லாம் இவ்வம்மையாரிடத்து வாய்க்கப்பெற்றிருந்தமையினாலன்றோ இன்றும் இவ்வம்மையாரை உலகம் போற்றுகிறது.

சகோதரிகளே! திலகவதியம்மையாரின் நலமுறுநெறியை நன்குணர்ந்தீரன்றோ? அந்நெறியாலன்றோ அவ்வம்மையாரை, உலகத்தார் அன்றும் புகழ்ந்தார்கள் இன்றும் புகழ்கின்றார்கள். ஆதலால் நீங்களும் ஒழுக்கத்திலுயர்ந்து, உற்றார் உறுதுயர்களைந்து, அற்றாரிடத்து அருள்தாங்கி, உடையானிடத்து உள்ளங்கசிந்து உருகி, உண்மைப்பயனைப் பெறவேண்டுவது இன்றியமையாதனவையன்றோ?

சகோதரர்களே! திலகவதியாரால் திருத்தமுற்ற திருநாவுக்கரசரை எண்ணுமின்கள். அப்பெரியார் உலகிற்குச்செய்த உதவியை விரித்திடவுமியலுமோ? அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் பவக்கடலைக்கடந்திடல் வேண்டாமோ? அங்ஙனமேசெய்து நலமுறுவோமாக.

## அப்பர் அருண்மொழி.

தாயுமா யெனக்கே தலைக்கண்ணுமாய்ப்
பேயனே னையுமாண்ட பெருந்தகை
தேயநாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனாரென நம்வினை நாசமே. (1)

மனிதர் காளிங்கேவம் மொன்று சொல்லுகேன்
கனிதந்தாற்கனி யுண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழலீச னெனுங்கனி
யினிது சாலவு மேசற்றவர்கட்கே. (2)

தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற்ற ரற்று கின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையு
மெழுதுங்கீழ்க் கணக்கின்னம் பரீசனே. (3)

மெய்ம்மையா முழவைச்செய்து விருப்பெனும் வித்தை
வித்திப்
பொய்ம்மையாங்களையை வாங்கிப் பொறையெனு நீரைப்
பாய்ச்சித்
தன்மையு நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுணிற்ப ராகிற்சிவகதி விளையுமன்றே. (4)

நெஞ்சமென்பதோர் நீள்கயந்தன்னுளே
வஞ்சமென்பதோர் வான்சுழிப்பட்டு நான்
துஞ்சும்போழ்து நின்னாமத் திருவெழுத்
தஞ்சுந்தோன்ற வருளுமையாறரே. (5)



உடம்பெனு மனையகத்துள்ளமே தகளியாக
மடம்படுமுணர் நெய்யட்டி யுயிரெனுந்திரிமயக்கி
யிடம்படு ஞானத்தீயா லெரிகொளவிருந்து நோக்கிற்
கடம்பமர்காளை தாதைகழலடி காணலாமே. (6)

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகடலாடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போதறியவொண்ணா
[illegible]யுறுமுணர்வை நல்காயொற்றியூருடையகோவே (7)

புள்ளுவர் ஐவர்கள்வர் புனத்திடைப்புகுந்து நின்று
துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறிவிளைய லொட்டார்
முள்ளுடையவர் கடம்மை மூக்கணன் பாதநீழல்
உள்ளிடைமறைந்து நின்றங்குணர்வினா லெய்யலாமே. (8)

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டு மிவ்வையகத்தே
[illegible]ழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பாதிப் புலியூர்ச்
[illegible]நீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ண
னே. (9)

மண்பாதலம்புக்கு மால்கடன்மூடி மற்றேழுலகும்
விண்பாதிசை கெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்று கண்டோந்திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக் கடவுட்சுடரான் கழலிணையே. (10)

# மதிப்புரைகள்.

---

## திருவாளர் பா. வே. மாணிக்கம் நாயக்கர் அவர்கள், B. E., M. C. I., (Superintending Engineer, P. W. D.,)

"தமிழ்மொழியில் பண்டைய உரை நடை நூற்கள் இலாமை ஓர் பெருங்குறையென்பது நன்குணர்ந்தது. அக்குறையைப் பயன் படுத்திக்கொள்ளும் முயற்சியில் புற நாட்டுக் கலவிக்கதைகளைக் கலவைத்தமிழிற் பொதிந்து புறப்படும் கடைச் சுவடிகள் உள்ளவைகள் உள்ளத்தை உறுத்த நொந்தேதற்கு மாணவர்களுக்கெனப் பண்டிதர் நடேசமுதலியார் எழுதியுள்ள 'திலகவதியார்' என்னும் சிறிய உரைநடை நூல் ஆறுதல் தந்தது.

"இது போன்ற தூய ஒழுக்கங்களைத் தூயதமிழிலெழுதிய பல்சிறு சுவடிகள் நம் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு இன்றியமையாதன.

"இத்தகைய நூல்களைப் பள்ளிப்பாடங்களாக மிகுத்து வழங்குவது நாட்டிற்கு நன்மை பயக்கும்."

---

## திருவாளர் A. S. பாலசுப்பிரமணியஐயரவர்கள் B. A., B. L., (District Judge).

"I have known M. Natesa Mudaliar Avl, Tamil Pandit, S P.G. College, Trichinopoly, for the past six or seven years............He has now commenced a series of short sketches of Lady Poets in the Tamil literature and has collected

all literary references to them by other eminent authors in Tamil literature. The series will in addition to being a valuable contribution to the history of the Tamil literature also bring to light the culture which Indian ladies have attained in ancient times in India. I heartily welcome the efforts of this Pandit and wish all success and encouragement to the work he has undertaken."

---

## "தமிழகம்" கோலாலம்பூர்.

"நூற்றொடக்கத்தில் சில வாக்கியங்களை வாசிக்கவும் ஆசிரியரின் நடைப்போக்கு எம்மனதைத் தன்னுடனே நீள இழுத்தேகியது. ஆங்கிலத்தில் ஜேம்ஸ் புருட் (James Froude) என்ற ஒரு சரித்திரவாசிரியர் உளர். அவர் சிறிய சிறிய வாக்கியங்களை உபயோகிப்பதில் பெயர்போனவர். அவர் தமிழ்நாட்டில் ஈண்டுப்பிறந்துளரோ வென ஐயுற்றோம். சொல் நயமும் பொருள் நயமும் நடை நயமும் ஒருங்கே சேர்ந்திருக்கின்றன. இப்புத்தகம் பெண்டிரும் பாலரும் கற்றாரும் மற்றாரும், பன்முறையும் பயிலத் தகுந்தது. பள்ளிப் பிள்ளைகளும் கலாசாலை மாணவர்களும் நல்ல தெளிந்த நடை பழகவேண்டின் இத்தகைய நூல்களை இரவும் பகலும் படிக்கவேண்டும். தமிழகம் புத்துயிர் பெறுகின்றதென்பதற்கு இம்மாதிரி நூல்களே சான்றாவன. இத்துறையில் முதலியார் அவர்களை மிகுதியும் ஊக்கி, இன்னும் பலப்பல தமிழ்நாட்டு வீரத் தாய்மார்களையும், கற்பலங்காரக் காரிகைகளையும், மங்கையர்க்கரசிகளையும், பற்றின வரலாறுகளை எமதுவறிய தமிழகத்தில் பெறவிரும்பின் நமது நேயர்கள் அனைவரும் இதைப் பெரிதும் ஆதரிப்பாராக."